


**21.05.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. தமிழகத்தில் 9 ரயில் நிலையங்கள் உட்பட அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட 103 ரயில் நிலையங்களை பிரதமர் திரு.நரேந்திரமோடி நாளை திறந்துவைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

2. ஆபரேசன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து உலக நாடுகளிடம் எடுத்துரைப்பதற்காக அனைத்து கட்சி பிரதிநிதிகளை உள்ளடக்கிய முதல்குழு இன்று புறப்பட்டது.

3. தமிழ்நாட்டில் 38 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பணிபுரியும் மகளிர் விடுதி கட்டிடங்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்துள்ளார்.

4. மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதியில் இன்றுமாலை புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு **H.S.** பிரணாய், கருணாகரன் ஆயுஷ் ஷெட்டி, கிடாம்பி ஸ்ரீகாந்த் முன்னேறியுள்ளனர்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

*********

பிரதமர் - அம்ரித்

நாடுமுழுவதும் அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட 103 ரயில் நிலையங்களை பிரதமர் திரு.நரேந்திரமோடி நாளை திறந்துவைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

18 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 86 மாவட்டங்களில் அமைந்துள்ள இந்த ரயில்நிலையங்களை பிரதமர் ராஜஸ்தான் மாநிலம் பிக்கானேரிலிருந்து திறந்துவைக்கிறார்.

பாரம்பரியம் கலாச்சாரம் முக்கியத்துவம் வாய்ந்த இந்த ரயில்நிலையங்கள் பொதுமக்களின் வசதிக்காக நவீனமயத்துடன் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் ஸ்ரீரங்கம், சிதம்பரம், பரங்கிமலை, திருவண்ணாமலை, விருதாச்சலம், சூலூர்பேட்டை சாமல்பட்டி, மன்னார்குடி, போளூர் ஆகிய 9 ரயில் நிலையங்கள் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து எமது செய்தியாளர்கள் வாய்ஸ்

*********

பிரதிநிதிகள் குழு

ஆபரேசன் சிந்தூர் தாக்குதல் தொடர்பாக விளக்கம் அளிப்பதற்காக ஐக்கிய ஜனதாதள் மக்களவை உறுப்பினர் திரு. சஞ்சய் குமார் ஜா தலைமையிலான முதல்குழு இன்று புறப்பட்டது.

இந்தோனேசியா, மலேசியா, கொரியா, ஜப்பான் சிங்கப்பூர் நாடுகளுக்கு இக்குழுவினர் பயணித்து ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் விவரங்களையும், தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் புகலிடம் அளிப்பதையும் எடுத்துரைக்க உள்ளனர்.

முன்னதாக புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய இக்குழுவின் தலைவர் திரு. சஞ்சய் குமார் ஜா தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆதரவு அளிப்பது குறித்து எடுத்துரைக்க இருப்பதாக குறிப்பிட்டார்.

சிவசேனா மக்களவை உறுப்பினர் ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான மற்றொரு குழுவும் ஐக்கிய அரபு அமீரகம், லிபேரியா, காங்கோ, சியரா லியோன் உள்ளிட்ட நாடுகளுக்கு இன்று செல்கிறது.

வரும் 5ஆம் தேதிவரை 7 குழுக்கள் 32 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு பாகிஸ்தானின் தீவிரவாத செயல்கள் குறித்து எடுத்துரைக்க உள்ளது.

இதனிடையே ஆபரேசன் சிந்தூர் தொடர்பாக காங்கிரஸ் தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்ததாக கூறப்படும் கருத்துக்களுக்கு பிஜேபி கண்டனம் தெரிவித்துள்ளது.

*********

அமலாக்க இயக்குனரகம்

நேசனல் ஹெரால்டு பத்திரிக்கை முறைகேடுகள் வழக்கில் காங்கிரஸ் தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி மற்றும் ராகுல்காந்தி ஆகியோர் குற்றம் சாட்டப்பட்டவர்களில் முதன்மையானவர்கள் என்று அமலாக்க இயக்குனரகம் டெல்லி நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணையின்போது குற்றப்பத்திரிக்கையின் நகலை இந்த வழக்கை தொடுத்த பிஜேபி மூத்த தலைவர் திரு. சுப்பிரமணிய சுவாமியிடம் வழங்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

*********

ராஜீவ்காந்தி நினைவு தினம்

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் 34ஆவது நினைவு தினத்தை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி அன்னாருக்கு அஞ்சலி செலுத்துவதாக தமது சமூகவலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

புதுதில்லியில் அமைந்துள்ள ராஜீவ்காந்தியின் நினைவிடமான வீர்பூமியில் காங்கிரஸ் கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்கட்சி தலைவர் திரு.ராகுல்காந்தி உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

இதனிடையே காஞ்சிபுரம் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.செல்வபெருந்தகை தலைமையில் அக்கட்சியினர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

வன்முறை எதிர்ப்பு உறுதிமொழியும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ரத்ததான நிகழ்விற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*********

விருது

பத்மபூஷன், பத்ம விபூஷன், பத்மஸ்ரீ விருதுகளுக்கு கலை, இலக்கியம், சமூகசேவை, கல்வி, விளையாட்டு, உள்ளிட்ட துறைகளில் அளப்பரிய சேவையாற்றியோர் வரும் ஜூலை 31ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

*********

ஹரீஸ்

நம் நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களுக்கு கடல்சார் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது என்று ஐ.நா.விற்கான இந்திய நிரந்தர பிரதிநிதி திரு.**P**.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

கடல்சார் பாதுகாப்பு தொடர்பான நிகழ்வில் உரையாற்றிய அவர் தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளும் இந்தியாவின் பாதுகாப்பிற்கு உகந்த செயலாக அமைந்துள்ளது என்றார்.

பயங்கரவாதம், கடற்கொள்ளை, ஆள்கடத்தல், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள், கடல்சார் பாதுகாப்பிற்கு ஊறுவிளைவிப்பதாகும் என்று சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள், கண்காணிப்பு, துரித அதிரடி நடவடிக்கைகள், பிராந்திய ஜனநாயகம், உலகளாவிய ஒத்துழைப்பு, கட்டமைப்பு மேம்பாடு போன்றவை கடல்சார் பாதுகாப்பை முன்னெடுத்துச்செல்வதாக எடுத்துரைத்தார்.

*********

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் பரங்கிமலை ஓசூர் திருவண்ணாமலை ஆகிய 3 இடங்களில் 38 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட பணிபுரியும் மகளிருக்கான விடுதி கட்டிடங்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் இன்று திறந்துவைத்தார்.

மதுரை நாகை கரூர் காஞ்சிபுரம் உள்ளிட்ட 14 இடங்களில் 177 கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட உள்ள தோழி விடுதி கட்டிடங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

மறைந்த காவல்துறையினரின் 115 வாரிசுதார்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

மீன்வளம் மற்றும் பால்வளத்துறை பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 72 பேருக்கு பணிநியமன ஆணைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

*********

எ.வ.வேலு

தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ஆயிரத்து 666 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

சிவகங்கையில் புறவழிசாலை பணிகளை இன்று ஆய்வு செய்த அவர், 110 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதற்கட்ட பணிகளில் 80 சதவிகிதம் முடிவடைந்திருப்பதாக கூறினார்.

தரமற்ற முறையில் சாலை பணிகள் கட்டமைப்பது கண்டறியப்பட்டால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் மரக்கன்றுகள் நடும் பணியும் நடைபெறுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

மதுரை இரணியம் பகுதியில் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மேலூர் அழகர்கோவில் சாலை விரிவாக்க பணிகளையும் திரு.எ.வ.வேலு ஆய்வு செய்தார்.

*********

அமைச்சர்கள்

சிவகங்கை மாவட்டம் முல்லாகோட்டை கல்குவாரி விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து 4 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மாநில அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் இன்று நேரில் வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்டம் மேவளூர் குப்பம் வள்ளீஸ்வரர் தேவஸ்தானத்திற்கு சொந்தமான நிலங்களை அளவீடு செய்யும் பணிகளை மாநில அமைச்சர்கள் திரு.தா.மோ.அன்பரசன், திரு.சேகர்பாபு ஆகியோர் இன்று துவக்கிவைத்தனர்.

*********

திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகள் அதிக வருமானம் ஈட்டும் வகையில் தன்னிறைவு விவசாய திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

மக்காச்சோளம் அறுவடை திட்டத்தை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் இத்திட்டம் அதற்கு பங்களிப்பதாக கூறினார்.

வாய்ஸ்

*********

இருவரி

அரியலூர் மாவட்டத்தில் சமூக சேவக தொண்டு நிறுவனத்திற்கான விருதுகள் பெற அடுத்த மாதம் 12ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சீத்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்டத்தில் வணிக நிறுவனங்களில் தினம் ஒரு திருக்குறள் இடம்பெற வேண்டும் என ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் கூறியுள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் வருவாய் தீர்வாயம் நாளை தொடங்கி வரும் 27ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

*********

விபத்து

பெரம்பலூர் அருகே பாடாலூரில் திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இன்றுகாலை நேரிட்ட சாலை விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கன்னியாகுமரியிலிருந்து சென்னை சென்றுகொண்டிருந்த கார் புளியமரத்தில் மோதியதில் இவ்விபத்து நேரிட்டது.

*********

மேட்டூர்

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 12 ஆயிரத்து 819 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 109.33 அடியாகும்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றிலும் நீர்வரத்து 14 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

மழை தொடர்வதால் நீர் வரத்து மேலும் அதிகரிக்க கூடும் என நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

*********

வானிலை

மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதியில் இன்றுமாலை புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது வடக்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

இதனிடையே வளிமண்டல சுழற்சி காரணமாக நீலகிரி, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு, தென்கிழக்கு, அரபிக்கடல், கேரளம், கர்நாடகம், குமரிக்கடல், மன்னார் வளைகுடா பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த 5 நாட்களுக்கு இதற்குட்பட்ட பகுதிகளுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

*********

பேட்மிண்டன்

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் **H.S.** பிரணாய் கருணாகரன் ஆயுஷ் ஷெட்டி, கிடாம்பி ஸ்ரீகாந்த் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் துருவ் கபிலா, டனிஷா கிறாஸ்டோ இணை - இந்தோனேசிய இணையை 21-18 15-21 21-14 என்ற செட்களில் வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளது.

*********

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்று இரவு ஏழரை மணிக்கு மும்பை இண்டியன்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

*********